பாம்பன் ஸ்வாமிகள் பாதமலர்கள் போற்றி

# சண்முக கவசம்

ஆன்மிகப் பல்சுவைத் திங்களிதழ்

பிப்ரவரி 2013 ❁ விலை ரூ. 15/-



ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமி – கொல்கத்தா

# முருகப் பெருமான் நீக்கமற நிறைந்து இருக்கும் இடம் எங்கே?

சிவத்தமிழ் குகமணி
தெ. தனபால்

Email : thiruppalli@yahoo.com
Cell : 9444958526

அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவசித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் சுமார் 82 ஆண்டுகளுக்கு முன் சீவன் முத்தராய் வாழ்ந்து பரமுத்தி அடைந்த பரம ஞானி ஆவார்கள். வேதாந்த சித்தாந்த சாரமாகச் சுவாமிகள் முருகப் பெருமானைப் பாடும் பொருளாகக் கொண்டு 6666 பாடல்கள் பாடியுள்ளார்கள். இவற்றை ஆறு மண்டலங்களாக வகுத்துள்ளார்கள். அடியாரகம் என்னும் 26 ஆம் திருப்பதிகம் திருவலங்கற்றிரட்டு முதற்கண்டம் என்னும் இரண்டாவது மண்டலத்தில் இடம் பெற்றுள்ளது.

இப்பதிகத்தில் புவனங்களை ஆளும் அதிபதிகள், மண்டலாதிபதிகள் ஆகியோர் எல்லாரும் வணங்கும் முருகன் எனக் கூறி அப்பெருமானே எல்லா அதிபதிகளையும் காத்து வரும் ஒப்பற்ற இறைவர் என்ற உண்மையைச் சுவாமிகள் உணர்த்துகிறார்கள். இவ்வளவு பெரியோன் ஆயினும் தன்னிடம் மெய்யன்பு பூண்டொழுகும் அடியார் எவராயினும் அவர் உள்ளத்தையே தன் இருப்பிடமாகக் கொள்பவர். அடியாருக்கு எட்டக் கூடிய எளியவராகத் தோன்றினாலும் பரம் பொருள் நிலையில் மனம், வாக்கு, காயங்களால் எட்ட முடியாத அறிவாகாசமாகவும் அருட்பெருஞ்சோதியாகவும் உள்ளார் என அவர் தடத்தம், சொரூபம் ஆகிய இரு நிலைகளையும் சுட்டுகின்றார்கள். அவர் எந்த நிலையில் இருந்தாலும் மெய்யன்புடையார்க்கு அகத்தில் எழுந்தருளி அருள்பாலிப்பார் என்ற நம்பிக்கையை நம் உள்ளத்தில் சுவாமிகள் உண்டாக்குகிறார்கள். அப்படி அடியாரகம் இருக்கும் முருகனிடம் உலக வாழ்க்கையில் அனுபவிக்க வேண்டிய போகங்களைக் கேட்பது அறிவுடைமையாகுமோ? கொடுப்பவரோ தற்பயன் கருதாத வள்ளல். எதையும் கொடுத்தருள்வார். கொடுக்கும் பேராற்றலுடையவர்கள், அவரிடம் கிடைத்தற்கரிய வரத்தைக் கேட்பதல்லவா அறிவுடைமை? அதனால் சுவாமிகள் அப்பெருமான் எவ்வாறு பரிபூரணப் பொருளாக உள்ளாரோ அதே பரிபூரணத்தைத் தமக்கு அருள வேண்டுகிறார்கள். இதுவே சுத்தாத்துவித முத்தியாகும்.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் உடனே நெஞ்சைத் தேற்றுகிறார். அவ்வளவு அரியவர்களுக்கு அரியவன் என்று மலைத்து விடாதே! அவ்வளவு அரியவனாய் இருந்தும் அவன் எளிமையாக அடியார் நெஞ்சில் வீற்றிருப்பான் என்று பெரியவர்கள் கூறுகிறார்கள். பெருமானே! அது உண்மையானால் என் நெஞ்சில் நிறைந்திருந்து இந்த உடல் அழியும் முன் எனக்கு அருள்புரிந்துவிடு என்று வேண்டுவதுதான் சுவாமிகள் அருளிய "அடியார் அகம்" என்ற பதிகத்தின் மூலக் கருத்து ஆகும்.

**இசை ஞானம் உள்ளவர்கள் இப்பாடலில் உள்ள பண் எவ்வாறு சிறந்தது என்று தெரிந்து கொள்ள ஒரு மிகப் பெரும் வாய்ப்பு:-**

"அடியார் அகம்" என்னும் இத்திருப்பதிகத்தைச் சுவாமிகள் சாதாரிப் பண்ணில் பாடியுள்ளார்கள். "பஞ்சமரபு" என்னும் இசை நூலில் சாதாப் பண் பற்றிய விளக்கம் காண்க:

சாதாரிப் பண் மங்கலப் பண்கள் எட்டனுள் ஒன்று

**தக்கேசி காந்தாரம் கௌசிகம் சாதா**
**திக்கார் புறநீர்மை செந்துருத்தி – தொக்கவியல்**
**செங்கயல்கண் பூங்கொடியே சீகாம ரஞ்சிகண்டி**
**மங்கலப் பண்ணாமென் னுமெட்டு.**

1. தக்கேசி, 2. காந்தாரம், 3. கௌசிகம், 4. சாதாளி அல்லது சாதாரி, 5. புறநீர்மை, 6. செந்துருத்தி, 7. சீகாமரம், 8. சிகண்டி என்பனவாகும்.

அந்தாளி படையராக மிரண்டெழுத்
தைந்தானாட் டங்கௌடி பஞ்சமும் – மிந்து





வழிந்த மாறா! வழுதியார் கோவே!
மொழிவந்த மங்கலமா மெண்.

1. அந்தாளிபாடை, 2. மேகராகம், 3.தக்கராகம், 4.அரும்பாலை, 5. நாட்டம், 6. கௌடி, 7. பஞ்சமம், 8.வயிரவம்.

மேற்கூறப்பட்டுள்ள 16 பண்களும் மங்கலப் பண்கள் எனப் பஞ்ச மரபு கூறுகிறது. இவற்றுள் "சாதாளி" எனப் பழம் ஏடுகளில் குறிக்கப்பட்ட பண் சாதாரி என்றே உரையாசிரியர்கள் இளம்பூரணரும், அடியார்க்கு நல்லாரும் குறித்துள்ளனர். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவைக்கு அமைத்துள்ள பண் முல்லைப் பண், அதுவே சாதாரி என இசைவல்லுநர் கூறுகின்றனர். முல்லைப் பண்ணுக்கு இக்கால இராகம் ''மோகனம்'' எனவும் விளக்கம் அளித்துள்ளனர். ஆதலால் பாடும் பணியே பணியாகக் கொண்டுள்ள பாடகர்கள் அடியாரகம் என்னும் இத் திருப்பதிகத்தை மோகன இராகத்தில் பாடிக் கந்தவேளையும், பாம்பன் சுவாமிகளையும் பக்த கோடிகளையும் உள்ளம் குளிரச் செய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறேன். அவ்வாறு பாடினால் பாடினவர்கட்கும் கேட்பவர்களுக்கும் மங்களம் உண்டாகும் என்பதில் ஐயமில்லை.



**முருகப் பெருமான் நீக்கமற நிறைந்திருக்கும் இடம் அடியார் அகமே என்பதை விளக்கும் உதாரணங்கள் சில:-**

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிய திருத்தொடையல் பதிகத்தின் 30ஆவது பாடல்:-

**"தமருகத்தை மூவிலையை யெழிற் பிணையைப்**
**பிடித்ததிருச் சயமாதேவன்**
**அமர்கயிலைப் பதியெமக்குத் திருக்கோயி வெள்ளினு**
**மெம்மடியார் நெஞ்சே**
**எமதிருப்பென் நெஞ்ஞான்ற மிருந்து எங்கு மேநிறைந்த**
**இறையே இந்தக்**
**குமரகுரு தாசனைக்கை விட்டுவிடா மற்காத்துக் கோடி**
**யன்றே"**

**"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்"**
என்பது திருமந்திரம் 1792

**"சகமலா தடிமை இல்லை தானலால் துணையு மில்லை**
**நகமெலாந் தேயக் கையால் நாண்மலர் தொழுது தூவி**
**முகமெல்லாம் கண்ணீர் மல்க முன்பணிந் தேத்துந் தொண்டர்**
**அகமலால் கோயில் இல்லை ஐயன் யாற னார்க்கே"**
(திருநாவுக்கரசர் தேவாரம் திருவையாறு:8)

**"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே**
**புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்"** (பொது 8)

**நாம் கொண்டிருக்கும் இவ்வுடலின் நிலை என்ன?**

ஒரு பறவை தான் குடியிருக்க ஒரு கூட்டைக் கட்டுகிறது. தான் வாழும் அக்கூட்டைத் துறந்து ஒரு நாள் எங்கோ பறந்து சென்று விடுகிறது. மீண்டும் அக்கூட்டைத் தேடி வருவதில்லை. நம் உயிரும் இந்தத் தசையும் கொழுப்பும் ஆகப் பருத்த உடம்பை தான் குடியிருக்கும் இடமாகக் கொண்டு வாழ்கிறது. ஒரு நாள் இதுவரை மிகக் கவனமாகப் பாதுகாத்து வந்த உடம்பை விட்டுப் பறந்து விடுகிறது. மீண்டும் இந்த உடம்பைச் சொந்தம் கொண்டாடி வருவதில்லை. பறவையின் கூட்டிற்கும் பறவைக்கும் உள்ள உறவு எத்தகையதோ அவ்வளவுதான் நம் உடம்புக்கும் உயிருக்கும் உள்ள உறவு.

**குடம்பை தனித்து ஒழியப் புட்பறந்தற்றே**
**உடம்பொடு உயிரிடை நட்பு**

(நிலையாமை 8 – திருக்குறள்)

நிலையில்லா உடம்பை நாம் 'மெய் என்று கூறுகிறோம். ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் மானசீக குருவான அருணகிரி நாதர் தன்னுடைய திருப்புகழில் "நிலையாப் பொருளை உடலாக் கருதி நெடு நாள் பொழுது அவமே பொய்" என்று வருணிக்கிறார்.

**நாம் செய்ய வேண்டிய பணி என்ன?**

நிலையில்லா உடம்பு இருக்கும் போதே இரை தேடுவதோடு இறைவனைத் தேட வேண்டும் என்ற சுவாமிகளின் ஞான வாக்கியத்திற்கு ஏற்ப மீண்டும் மீண்டும் பிறக்கும் அவலத்தை அடையாமல் செவ்வேட் பரமன் திருவடியில் அத்துவிதமாகக் கலப்பதற்கு அப்பெருமானைச் சிந்தித்து உருகி அடைக்கலமாக வேண்டும். ஒவ்வோர் ஆன்மாவின் கடைசிக் குறிக்கோள் முத்தி என்னும் பரிபூரணத்தை அடைவதுதான். அதனைத் தூய உடம்பு நீங்கு முன்பே பெறுவது சிறப்பு. அப் பேறே சீவன் முத்தர் நிலை எனக் கூறப்படுகிறது. "பொத்த உடல் விட்டிடு முன் முற்றநிலை ஆகு பரிபூரணம் எனக்கு அருள்நிதி" என்பது ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் வாக்கு ஆகும்.

ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச அடியார்கள் இந்தப் பாடலை பதிவிறக்கம் செய்து கொள்ளும் வகையில் தரப்பட்டுள்ளது. இந்தப் பாடலையும் நீங்கள் அனைவரும் கேட்டு மகிழும்படி ஒலி வடிவமும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த பாக்கியத்தை அடியேன் பெறுவதற்கு சுவாமிகள் எனக்கு அளித்த பிச்சையாகக் கருதி மன மகிழ்ச்சியடைகிறேன்.

கருத்துரை ( பாடல் 1க்கு)

இரத்தின முடிகள் அணிந்த தேவர்களின் அரசன் ஆன தேவேந்திரன் என்னும் அழகுடைய பெரிய மயில் மீதமர்ந்து அசுரர்களின் அரசர் ஆன சூரபன்மன் அஞ்சும்படி போர் செய்து பெரிய வேற்படை கொண்டு அவனுடைய பெரிய உடம்பை இரு கூறாகப் பிளக்கச் செய்த மாவீரனே! பிறவி என்னும் நோய் இடராமல் மேலான ஓங்கார மயமாய் மெய்யடியார்களின் உள்ளத்தில் எழுந்தருளியுள்ள முருகா! என் உயிரானது உடம்பை விட்டுப் போகுமுன்னே என்னைச் சேர்த்து என்றும் அழியாத நிலையான முழுநிறைவை அருள்வாயாக.

கருத்துரை (பாடல் 2க்கு)

பாதல உலகங்கள் எல்லாவற்றையும் நடத்தி வருகின்ற வலிமை கொண்ட ஆடகேசுரரும், பாரமான நரகங்கள் எவையும் பெரிய காவல் செய்திடும் கூர்மாண்டரும், மண்ணால் ஆகிய பிரமாண்டத்தைப் பெரிய காவல் செய்து ஆதரவு செய்து கொண்டிருக்கும் காலாக்கினி ருத்திரரும் துதிக்கும் முதற்பொருளாகி மெய்யடியார் உள்ளத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானே! என் அறிவொளியை மிகுத்துக் குற்றமற்ற தன்மையான முழுநிறைவை எனக்கு அருள்வாயாக.

மேலே இரண்டு பாடலுக்கு மட்டும் பொருள் தரப்பட்டுள்ளது. மேலும் வேண்டும் அன்பர்கள் சண்முக கவசம் மாத இதழ் முகவரிக்கு தொடர்பு கொண்டால் இலவசமாக அனுப்பப்படும் .

( பாடல்களின் விளக்க உரை பேராசிரியர் டாக்டர் ப.இராமன் அவர்களுடையது என்பதையும் நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்)



## ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

**சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :**

**www.pambanswamigal.net or www.pambanswamigal.org**

**மேலும் விவரங்களுக்கு : Email: thiruppalli@yahoo.com or 94449 58526**